## 05, 14, 23 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:



குறைகளை நிறைவாக்கிக் கொள்ளும் தன்மையுடைய எண்ணில் பிறந்துள்ள உங்களுக்கு, இவ்வாரம் செய்தொழிலில் தடைகள் ஏற்பட்டு விலகும். அதனால் பொறுமையுடன் நடந்து கொள்ளுங்கள். கூட்டாளிகளைக் கலந்தாலோசித்த பிறகே எந்த முக்கிய முடிவையும் எடுக்கவும். மற்றபடி உங்கள் பொருளாதார நிலை சிறப்பாகவே தொடரும். உங்களின் கீழ் பணிபுரிபவர்களிடம் கருணையுடன் நடந்து கொள்வீர்கள். குடும்பத்தில் நடக்கும் நற்காரியங்களுக்காகச் செலவு செய்வீர்கள். குழந்தைகளும் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார்கள். சகோதர, சகோதரிகளிடமும் இணக்கமான சூழல் உண்டாகும். அதேநேரம் இலக்கை நிர்ணயித்து உழைக்கவும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முன்னதாகவே புரிந்து கொண்டு, அதற்கேற்ப உங்கள் திட்டங்களை மாற்றி அமைப்பீர்கள். வெளிநாட்டுத் தொடர்புகள் நலம் தரும்.

**அதிர்ஷ்ட நாட்கள்: 08, 09, அதிர்ஷ்ட எண்கள்: 1, 4.**

## 06, 15, 24 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:



பகைமை பாராட்டுபவர்களுக்கும் தாராள மனதுடன் உதவி செய்யும் தன்மையுள்ள எண்ணில் பிறந்துள்ள நீங்கள், வம்பு வழக்குகளிலிருந்து விடுதலை பெறுவீர்கள். பிரச்சினைகளை சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். முன்பின் அறியாதவர்களும் உங்களைத் தேடி வந்து உதவி செய்வார்கள். உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெறுவீர்கள். பணவரவு நன்றாக இருக்கும். உடல் ஆரோக்கியம் கவனிக்கப்பட வேண்டியிருக்கும். பெற்றோருக்கும் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். மேலும், போட்டியாளர்களைப் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**அதிர்ஷ்ட நாட்கள்: 05, 10, அதிர்ஷ்ட எண்கள்: 2, 3.**

## 07, 16, 25 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:



பொதுநலத்திலும் சிறிது சுய நலம் பார்க்கும் தன்மை கொண்ட எண்ணில் பிறந்துள்ள உங்களின் வைராக்கியம் உயரும். செய்யும் தொழிலில் துணிச்சலுடன் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். தெய்வீகக் காரியங்களில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். குழந்தைகளிடம் கடவுள் பக்தியை வளர்ப்பீர்கள். குடும்பத்தில் அமைதியைக் காண்பீர்கள். அதேநேரம் நெருங்கிய நண்பர்களால் சிறு குழப்பங்கள் உண்டாகும். எனினும், அதிலிருந்து விரைவில் விடுபட்டுவிடுவீர்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வெளியிலிருந்து வர வேண்டிய பணமும் வந்து சேரும். சகோதர, சகோதரி வகையில் ஒற்றுமை மேலோங்கும்.

**அதிர்ஷ்ட நாட்கள்: 08, 09, அதிர்ஷ்ட எண்கள்: 5, 7.**

## 08, 17, 26 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:



தனக்கென வாழாது பிறர் நலமே தன் நலம் என்று நினைத்துப் பொதுச் சேவை செய்யும் தன்மையுள்ள எண்ணில் பிறந்துள்ளவர்களே! உங்களுக்கு இந்த வாரம் உயர்ந்தவர்களின் நட்பு கிடைத்து, ஆதரவு கூடும். உங்களுக்கெதிராகப் போடப்பட்டிருந்த வழக்குகள் தோற்றுப் போகும். அதேசமயம், நீங்கள் கடினமாக உழைக்க வேண்டிவரும். பயணங்களாலும் உடனடியாக அனுகூலங்கள் ஏற்படாது. அதனால் அனைவரிடமும் விட்டுக் கொடுத்து நடக்கவும். மற்றபடி கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் தொய்வு இல்லாமல் முடியும். உங்கள் செயல்களை நன்கு திட்டமிட்ட பிறகே தொடங்குவீர்கள். சகோதரி, சகோதர வழியிலும் இணக்கமாக நடந்து கொண்டு, உங்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**அதிர்ஷ்ட நாட்கள்: 05, 10, அதிர்ஷ்ட எண்கள்: 3, 6.**

## 09, 18, 27 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:



பேராசை எண்ணம் இல்லாமல் நீதி நேர்மைக்காகப் பாடுபடும் தன்மையுடைய எண்ணில் பிறந்துள்ள நீங்கள், சோதனைகளையும் சாதனைகளாக மாற்றிவிடுவீர்கள். புதிய பூமி வாங்கும் யோகம் உண்டாகும். உங்கள் தோற்றத்தில் மிடுக்கு கூடும். செய்தொழிலில் வளர்ச்சி ஏற்படும். கூட்டாளிகளின் உறுதுணையுடன் காரியமாற்றுவீர்கள். அரசாங்கத்திலிருந்தும் சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்தில் நிம்மதி நிலவும். பிள்ளைகளால் சந்தோஷம் கிட்டும். சொத்தில் பெற்றோர்களிடமிருந்து உங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைத்து மகிழ்வடைவீர்கள். அதேநேரம் உங்கள் காரியங்களை உங்கள் நேரடிப் பார்வையிலேயே செய்யவும். மேலும் உங்கள் பெயரில் எவருக்கும் பணம் வாங்கிக் கொடுக்க வேண்டாம்.

**அதிர்ஷ்ட நாட்கள்: 07, 10, அதிர்ஷ்ட எண்கள்: 7, 9.**